**01.10.2019.**

S.C.No. 84 / 2019

வா.சா.1.

திருமதி . நளினி வயது 36

இரு தரப்பு வழக்கறிஞர் ஆஜர். முதல் விசாரணை தொடர்ச்சியாக இரு தரப்பு வழக்கறிஞர் அனுமதியின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சியாக விசாரிக்கப்படுகிறது.

என் கணவர் ராஜேஷ் என்பவரின் செல்போன் நெம்பர் 9566129111 ஆகும்.

1வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை =

என்னுடைய வீடு பூந்தமல்லி நெடுஞ்சாலையில் இருந்து போரூர் போகும் சாலையில் மேற்கில் இருந்து கிழக்கு திசையில் ஆலப்பாக்கம் நெடுஞ்சாலையில் அமைந்துள்ளது என்றால் சரி. என் வீட்டிற்கு எதிரிலேயே இந்தியன் ஆயில் பெட்ரோல் பங்க், ஏ.ஜி.எஸ். சினிமா திரையரங்கு ஆகியவை அமைந்துள்ளது என்றால் சரி. என் வீடு நாதூராம் அடகு கடைக்கும் ஞானம் கூல் பார் கடைக்கும் நடுவில் தான் அமைந்துள்ளது என்றால் சரி. என் வீடு பிரதான சாலையில் மெயின் ரோடில் அமைந்துள்ளதால் காரை அங்கு நிற்க வைக்கமுடியாது என்ற காரணத்திற்காக எனது கணவர் விறகு கடை பைப் குடோன் சந்தில் காரை நிறுத்துவது வழக்கம் என்றால் சரி. என் கணவர் காரை நிறுத்தும் இடத்தில் இருந்து எங்கள் வீட்டிற்கு நடந்து வருவதற்கு சுமார் 5 நிமிடத்தில் வர முடியும் என்றால் சரி. அந்த இடம் காலி இடமாக இருப்பதால் வழக்கமாக என் கணவர் மது அருந்துவதற்கு போவது வழக்கம் என்றால் சரியல்ல. அடிக்கடி என் கணவருக்கு குடிக்கும் பழக்கம் இருக்கிறது என்றால் சரி. சுந்தர் ராஜ் சிவகுமார் ஆகியோர் உடன் என் கணவர் மது அருந்துவது வழக்கம் என்றால் சரியல்ல. எனது கணவருக்கு வேறொரு பெண்ணுடன் தொடர்பு உள்ள விஷயம் எனக்கு தெரியுமா என்றால் தெரிந்து கேட்டோம். நட்பு ரீதியாக பழகுவதாக சொன்னார். 15.7.2018 அன்று மாலை 7 மணியில் இருந்தே என் கணவர் மது அருந்தி கொண்டிருந்த விவரம் எனக்கு தெரியாது. நான் என் கணவரிடம் போன் செய்து கேட்ட போது சிவகுமார், சுந்தர் ராஜ், குமரேசன் ஆகியோர்கள் உடன் பேசிக்கொண்டிருப்பதாக தெரிவித்தார். நீண்ட நேரம் என் கணவர் வராததால் நாங்கள் 10 மணி அளவில் அந்த இடத்திற்கு நானும் என் மாமியாரும் சென்றோம். என் கணவரை

சம்பவ இடத்தில் பார்த்துவிட்டு அவரை தூக்கி காரில் வைப்பதற்கு 3 பேர் உதவி செய்தார்கள். அங்கிருந்து வீட்டிற்கு வந்த போது என் கணவரை காரில் இருந்து இறக்கி வைப்பதற்கு எத்தனை பேர் உதவி செய்தார்கள் என்றால், நாங்கள் என் கணவர் போதையில் இருந்ததால் கார் கண்ணாடிகளை இறக்கிவிட்டு விட்டு வீட்டிற்கு வந்துவிட்டோம். கார் ஆப் செய்து தான் இருந்தது. கார் ஆப் செய்துவிட்டு கார் சாவியை எங்களிடம் கொடுத்துவிட்டார்கள். என் கணவர் போதையில் இருந்த போது நாங்கள் எழுப்பும் போது என்ன கூறினார் என்று கேட்டால் ஏற்கனவே என் குழந்தை மீது குடிக்க மாட்டேன் என்று சத்தியம் செய்துவிட்டு மீண்டும் குடித்ததால் அந்த கோபத்தில் நான் எழுப்பாமல் விட்டுவிட்டு போதை தெளிந்தால் வந்து விடுவார் என்று விட்டுவிட்டு போய்விட்டேன். என் மாமியார் மேரி, என் மாமனார் சம்பத் அவர்களும் போதை தெளிந்தால் வந்து விடுவார் என்று என்னுடன் வந்துவிட்டார்கள். அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் யாரும் அந்த இடத்தில் இல்லை. கடை சாத்தி இருந்தது. ஏற்கனவே போதையில் காரில் இருந்தால் தெளிந்து வந்துவிடுவார். ஏற்கனவே 2 முறை காரில் போதை தெளிந்த பிறகு எழுந்து வந்துள்ளார். நான் என் மாமியார் மேரி என் மாமனார் சம்பத் ஆகியோர்கள் வீட்டிற்கு போகும் போது சுமார் 10 மணி இருக்கும் என்றால் சரி. டேங்க் உள்ள இடத்தில் தான் கொண்டு வந்து காரை நிறுத்தினோம். அதன் பிறகு என் மாமியார் அதிகாலை 4 மணிக்கு வந்து பார்த்தார். அவர் பார்த்துவிட்டு வந்து தான் எங்களை எழுப்பினார். அதிகாலை 4 மணிக்கு என் மாமியார் தெரிவித்த பிறகு தான் நான் போய் பார்த்தேன் என்றால் சரி. எங்கள் வீட்டிற்கு வலது பக்கம் நாதூரா அடகு வியாபார கடையிலும் எதிரில் உள்ள பெட்ரோல் பங்கிலும் சி.சி.டி.வி. பொருத்தப்பட்டுள்ளது தெரியுமா என்றால் தெரியும். என் கணவர் குடித்துவிட்டு கீழே விழுந்து கிடந்த இடத்தில் இருந்த சி.சி.டி.வி கேமிரா குறித்து தான் போலிசார் என்னிடம் தெரிவித்தார்கள். 21 ஆம் தேதி தான் சி.சி.டி.வி. கேமிராவை எனக்கு காண்பித்தார்கள். 21க்கு முன்னர் நான் சி.சி.டி.வி. கேமிராவை நான் பார்க்கவில்லை. 20 ஆம் தேதி புகார் கொடுத்தேன். அதன் பிறகு தான் மறு நாள் சி.சி.டி.வி. கேமிராவை காண்பித்தார்கள். என் கணவர் இருந்த கார் வீட்டிற்கு அருகில் காரை இரவு 10.30 மணி முதல் காலை 4 மணி வரை இருந்த சி.சி.டி.வி. கேமிராவை என்னிடம் காட்டவில்லை என்றால் சரி. 16 ஆம் தேதி என் கணவரை அடக்கம் செய்யும் போது மயானத்தில் அடக்கம் செய்வதற்காக மருத்துவ சான்றிதழ் கொடுத்தோமோ என்றால் இல்லை.

என்னிடம் காட்டப்படுவது என் கணவரின் இறப்பிற்காக மாநகராட்சியில் வழங்கப்பட்ட இறப்பு சான்றிதழ் என்றால் சரி. அந்த இறப்பு சான்றிதழ் எ.ம.சா.ஆ.1. ( சாட்சி சொல்கிறார் என் கணவர் இயற்கையாக இறந்துவிட்டார் என்று தான் அடக்கம் செய்தோம். ) அந்த இறப்பு சான்றிதழில் என் வீட்டு முகவரியில் தான் என் கணவர் இறந்து போனதாக சொல்லப்பட்டுள்ளது என்றால் இறப்பு சான்றிதழை என் மாமனார் தான் வாங்கி வந்தார். 16.7.2018அன்று தான் என் கணவர் இறந்ததாக மாநகராட்சிக்கு தகவல் தெரிவித்துள்ளோம் என்றால் அது என் மாமானாருக்கு தான் தெரியும். 13.7.2018 அன்று எதிரி என் வீட்டிற்கு வந்து மிரட்டியது சம்மந்தமாக நான் புகார் ஏதும் கொடுக்கவில்லை என்றால் சரி. புகார் நான் எழுதவில்லை. என் சொந்தக்காரர் எழுதினார். நான் அதில் கையெழுத்து போட்டேன். எனக்கு படிக்க தெரியும். புகாரில் 13.7.2018 அன்று மாலை 5 மணிக்கு எதிரி என் வீட்டிற்கு வந்து மிரட்டியது சம்மந்தமாக தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. மிரட்டியதை குறித்து நான் சொல்லி உள்ளேன். தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை. ஆனால் மிரட்டிய விவரத்தை சொல்லி உள்ளேன். 15.7.2018 அன்று என் கணவருக்கு போன் செய்து கேட்ட போது குமரேசனும் உடன் இருந்ததாக சொன்னாரா என்றால் சொன்னார். நான் அப்போது என் கணவரை இரண்டு நாளுக்கு முன்பு தானே குமரேசன் மிரட்டி விட்டு போனார், நீங்கள் ஏன் அவருடன் இருக்கிறீா என்று கேட்டேனா என்றால் கேட்டேன். என் கணவர் அதற்கு அந்த பிரச்சனை சரியாகிவிட்டது என்று சொன்னார். பிரண்டாகிவிட்டோம் என்று என் கணவர் தெரிவித்தார். இந்த விவரத்தை போலிசார் விசாரணையில் நான் சொல்லி உள்ளேன். முருகேசன் மிரட்டிவிட்டு சென்றதையும் அவர் மீண்டும் வந்து அழைத்து சென்ற விவரத்தையும் சொல்லி உள்ளேன். சிவகுமார், சுந்தர் ராஜ் ஆகியோர் தான் முருகேசன் தான் என் கணவரை கூட்டி சென்றதாக எனக்கு தெரிவித்தார்கள். நடுவில் வீட்டிற்கு வந்து போனாரா என்றால் நான் சர்சிற்கு போய் இருந்ததால் எனக்கு தெரியவில்லை. சிவகுமாரும் சுந்தர் ராஜும் சம்பவத்திற்கு மறுநாள் நான் கேட்டு விசாரித்த போது தெரிவித்தார்கள். போன் செய்த போது தெரிவித்ததால் அதற்கு பின்னிட்டு நான் விசாரித்த போது இந்த விவரம் குறித்து தெரிவித்தார். 18 ஆம் தேதியில் இருந்து அவ்வாறு விசாரிக்க ஆரம்பித்தேன். போனில் சொல்லும் போது சுந்தர் ராஜ், சிவகுமார் என்ற இரண்டு பேர்களை தெரிவித்தார். எனவே அவர்களை கூப்பிட்டு விசாரித்த போது அவர்கள் தான் குமரேசன் பெயரை தெரிவித்தார்கள்.

விறகு கடைகாரர் தினகரன் என்பவரை நான் விசாரிக்கவில்லை. அன்ற 7 மணியில் இருந்து 8.27 வரை சிவகுமார், சுந்தர் ராஜன் , என் கணவரும் மது அருந்திய விவரத்தை என்னிடம் சொன்னார்களா என்றால் அந்த இருவரும் என்னிடம் கூறினார்கள். நான் சர்சிற்கு போகும் போது வீட்டை பூட்டிவிட்டு சாவியை ஜன்னல் மீது வைத்துவிட்டு செல்வோம். 15.7.2018 அன்ற சுமார் 8.27 ல் இருந்து 9.27 வரை கார் நிறுத்தப்பட்டிருந்த விறகு கடை அருகில் என் கணவர் இல்லை என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் 7.30 மணிக்கு போன் செய்யும் போது என் கணவர் அங்கிருந்ததாக தெரிவித்ததால் அவர் அங்கு தான் இருந்திருக்க வேண்டும். போலிசார் என்னை விசாரிக்கும் போது 8.30 மணியில் இருந்து 9.30 மணி வரை என் கணவர் எங்கு போயிருந்தார் என்று என்னை போலிசார் விசாரணை செய்தார்கள் என்றால் விசாரணை செய்தார். அவர்கள் உடன் தான் என் கணவர் இருந்ததாக விசாரணையில் சொல்லி உள்ளேன். 15.7.2018 8.27 ல் இருந்து 9.27 வரை என் கணவர் அந்த இடத்தில் இல்லை என்று சிசிடிவி கேமிராவை காண்பித்து கேட்டார்கள். முதலில் அவர்கள் 4 பேரும் அங்கு இருந்தார்கள். அதன் பின்னர் தான் அவர்கள் அங்கிருந்து போய்விட்டார்கள். நான் சி.சி.டி.வி கேமிராவை பார்க்கும் போது எத்தனை மணிக்கு என் கணவர் சம்பவ இடத்திற்கு வந்தார் என்றும் எத்தனை மணிக்க குமரேசன் அந்த இடத்திற்கு வந்தார் என்று சி.சிடிவி கேமிராவை காவல் நிலையத்தில் பார்க்கும் போது பார்த்தேனா என்றால் நான் அழுது கொண்டிருந்ததால் சி.சி.டி.வி. கேமிராவில் இருந்த நேரத்தை நான் பார்க்கவில்லை. காவல் நிலையத்தில் நான் அழுகையுடனும் பதற்றத்துடனும் காவல் நிலையத்தில் நான் பார்த்த சிசிடிவி கேமிராவில் பார்த்த பதிவுகளை குறித்து தான் நான் முதல் விசாரணையில் சொல்லி உள்ளேன் என்றால் சரி. அழுகையுடன் பார்த்தேன். பதற்றத்துடன் பார்க்கவில்லை. நான் போனவாரம் காவல் நிலையத்தில் சிசிடிவி கேமிராவை பார்த்த போது நான் ஆரம்பித்தில் பார்த்த அதே காட்சிகள் தான் இருந்ததா என்றால் இருந்தது. நான் போனவாரம் சிசிடிவி கேமிராவை நான் எவ்வளவு நேரம் பார்த்தேன் என்றால் 1/2 மணி நேரம் பார்த்தேன். அப்போது என் மாமியார், மாமனார் என்னுடன் இருந்தார்கள். கேமிராவை போட்டு காட்டும் போது 4 பேர் இருந்தார்கள். ஆய்வாளர் எனக்கு போட்டு காண்பித்தார். சிசிடிவி கேமிராவை பார்த்து இது யார் என்று என்னிடம் கேட்டார்கள். நான் அது குமரேசன் தான் என்று தெரிவித்தேன். அந்த சிசிடிவி பதிவேட்டில் காரில் என் கணவர் படுக்க வைக்கப்பட்டிருந்த போது தான் நானும் என்

மாமியாரும் போய் பார்த்ததாக கேட்டார்களா என்றால் கேட்டார்கள். நாங்கள் மணிகண்டன் , தனசேகரன் வினோத்குமார் உதவியை கேட்டு தான் அதே காரில் என் கணவரை வீட்டிற்கு கொண்டு வந்தோம் என்று தெரிவித்துள்ளேன். மணிகண்டன் , தனசேகர், வினோத்குமார் எங்களுக்கு தகவல் கொடுத்து தான் அங்கு போனோமா என்றால் நாங்களாகத்தான் தேடிக்கொண்டு போனோம். 15.7.2018 சுமார் 9.54 மணிக்கு என் கணவருக்கு போன் செய்து 2 நிமிடம் பேசினீர்களா என்றால் இல்லை. என் போனில் இருந்து என் கணவர் இடம் அந்த நேரத்தில் பேசி இருக்க வாய்பிருக்கிறதா என்றால் நான் சர்சிற்கு போகும் போது செல்போனை வீட்டில் வைத்து போய்விட்டேன். நான் சர்சில் இருந்து வீட்டிற்கு வரும் போது சுமார் 10 மணி ஆகிவிட்டது. அப்போது என் கணவர் வீட்டில் இல்லை. சர்ச்சில் இருந்து வீட்டிற்கு போய்விட்டு என் மாமனார், மாமியார் ஆகியோர்களை அழைத்து கொண்டு அவர் பேசிக்கொண்டிருந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு போனோம். அந்த இடத்தில் 10 மணிக்கு நாங்கள் போனபோது தனசேகரன், மணிகண்டன், வினோத்குமார் ஆகியோர்கள் தான் அந்த இடத்தில் பேசிக்கொண்டிருந்தார்கள். என் கணவருக்கு தெரிந்தவர்கள் என்பதால் அவர்களை நான் உதவிக்கு அழைத்தேன். நான் அங்கு போய் அவ்விடத்தில் பேசிக்கொண்டிருந்தவர்களை உதவிக்கு அழைத்ததால் தான் வந்தார்கள் என்றால் சரி. 15.7.2018 அன்று சுமார் மாலை 6.26, மாலை 6.43 , மாலை 7.57 , இரவு 9.17, இரவு 9.22, ஆகிய நேரங்களில் என் கணவர் குமரேசனிடம் பேசினார் என்பதை குறித்து போலிசார் என்னிடம் விசாரித்தார். 14.7.2018 அன்று காலை 9.07 மணிக்கு என் கணவர் எதிரிக்கு போன் செய்து பேசினார் என்றும் அது குறித்து என்னை போலிசார் விசாரித்தார்களா என்றால் இல்லை. 15 ஆம் தேதி தான் என் கணவர் குமரேசன் உடன் பேசி உள்ளார். 15 ஆம் தேதி இரவு சம்பவ இடத்திற்கு சென்று என் கணவரை எழுப்பும் போது என்ன கூறி எழுப்பினேன் என்றும் அதற்கு என் கணவர் என்ன பேசினார் என்றால் என் கணவர் அதிகமாக குடித்துவிட்டு போதையாக இருந்ததால் எந்திரிக்கள் என்று தெரிவித்தேன். அவர் போதையாக இருந்தாரா , மயக்கமாக இருந்தாரா என்றால் போதையாக இருந்ததாக நான் நினைத்து கொண்டேன். நான் எழுப்ப முயற்சி செய்தேன். அவர் போதையாக இருந்ததாக நினைத்து காரில் எடுத்து போட்டுக்கொண்டோம். மேலும் என் கணவர் குடித்துவிட்டார் என்ற கோபத்திலும் இருந்தேன். என் கணவரின் தாயார் எழுப்பினரா என்றால் அவர்களும் தான் எழுப்ப முயற்சி செய்தார்கள்.

போதையாக இருப்பதாக நினைத்து கொண்டு வந்தோம். 13.7.2018 அன்று ஒரு மிரட்டல் சம்பவம் நடந்திருந்தால் 15.7.2018 அன்று என் கணவர் குமரேசன் உடன் பேசிக்கொண்டிருந்தார் என்ற தெரிந்தும், குடித்து கொண்டிருந்தார் என்று தெரிந்தும் என் கணவரை எழுப்பாமல் இருந்திருக்க மாட்டேன் என்று சொன்னால் நாங்கள் எழுப்பினோம். ஆனால் என் கணவர் போதையில் இருக்கிறார் என்று நினைத்து தான் நாங்கள் வீட்டிற்கு வந்தோம். 16.7.2018 அன்று காலை 4 மணிக்குதான் என் கணவர் மூச்சு பேச்சு இல்லாமல் இருக்கிறார் என்றும் அது போதை இல்லை என்றும் தெரிந்தது என்றால் சரி. என் மாமியார் தான் முதலில் போய் பார்த்தார். சம்பவ இடத்தில் என் கணவரை தூக்க போன நேரத்தில் இருந்து காலை 4 மணிக்கு என் கணவரை எழுப்பிய வரை இடைப்பட்ட நேரத்தில் எப்போது என் கணவருக்கு மூச்சு பேச்சு இல்லாத நிலைக்கு சென்றார் என்று எனக்கு தெரியாது என்றால் சரி. 16.7.2018 அன்று காலை 4 மணிக்கு கார் ஜன்னல்கள் திறக்கப்பட்ட நிலையில் தான் காரில் என் கணவர் இருந்தார் என்றால் சரி. அதிகாலை 4 மணிக்கு என் கணவரை தட்டி எழுப்பும் போது மூச்சு பேச்சு இல்லை. முகம் கருப்பாக இருந்தது. வாயில் இருந்து இரத்தம் வந்தது. வாயில் இரத்தம் வந்த விவரத்தையும், முகம் கருப்பாக இருந்த விவரத்தையும் நான் போலிசார் இடம் சொல்லவில்லை. என் கணவர் இரவில் சட்டை போட்டு தான் இருந்தார். அந்த சட்டையில் வாயில் இருந்து வந்த இரத்தம் இரத்தக்கறை இருந்ததா என்றால் இல்லை. நான் ஏ.சி.எஸ். மருத்துவமனைக்கு சென்ற போது மருத்துவரிடம் அந்த விஷயத்தை சொன்னேனா என்றால் நான் மருத்துவமனைக்கு போய்விட்டு திரும்ப வந்து வீட்டில் எடுத்து போட்ட பார்த்த பிறகு தான் இரத்தம் வந்த விவரத்தை கண்டுபிடித்தேன். இந்த விவரத்தையும் போலிசார் விசாரணையில் சொல்லவில்லை என்றால் போலிசார் விசாரணையில் சொன்னேன். 13.7.2018 அன்று அதை போன்று ஒரு மிரட்டல் சம்பவமே நடக்கவில்லை என்றாலும் அவ்வாறு நடந்திருந்தால் எனது புகாரிலேயே அதை தெரிவித்திருப்பேன் என்றாலும் நான் புகார் கொடுக்க 5 நாள் தாமதம் ஆகியிருக்காது என்றாலும் சொன்னால் சரியல்ல. எதிரிகள் மீது காழ்புணர்ச்சி இருந்ததால் இந்த வழக்கை சோடனை செய்வதற்காக அவ்வாறு சொல்லி உள்ளோம் என்றால் சரியல்ல. சி.சி.டி.வி. கேமிராவில் நான் பார்த்ததாக சொல்லும் விவரங்கள் எதுவும் அந்த சிசிடிவி கேமிராவில் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

மறு விசாரணை –

முதல் விசாரணையில் சாட்சி சிசிடிவி கேமிராவில் உள்ள பதிவு குறித்து சாட்சியம் அளித்துள்ளதால் குறுக்கு விசாரணை செய்யும் பொருட்டு இந்த சாட்சி மூலமாகவே சிசிடிவி சம்மந்தப்பபட்ட பென் டிரைவ் சாட்சி மூலம் குறியீடு செய்ய இரு தரப்பு வழக்கறிஞர் அனுமதி பேரில் குறியீடு செய்யப்படுகிறது.

அந்த இரண்டு சி.டி. சா.பொ. 1. மற்றும் சா.பொ.2. ஆகும்.

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை =

சாட்சியிடம் லேப் டாப் மூலமாக சிசிடிவி புட்டேஜில் இருந்து 19.39 என்று நேரத்தில் பதிவாகி உள்ள பதிவை குறித்து திறந்த நீதிமன்றத்தில் லேப் டாப் மூலமாக சா.பொ.1. போட்டு காண்பித்து கீழக்கண்ட கேள்வி கேட்கப்படுகின்றது.

அந்த குறிப்பிட்ட நேரமான 19.39 ல் என் கணவர் ராஜேஷ், சுந்தர் ராஜன், சிவகுமார் ஆகிய 3 பேர் தான் அந்த கார் அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்றால் சரி. அங்கு அந்த நேரத்தில் குமரேசன் இல்லை என்றால் சரி. நான் என் கணவருக்கு போன் செய்த போது சுமார் 7.30 மணி இருக்கும். நான் அவ்வாறு போன் செய்த போது என் கணவர் சுந்தர் ராஜன், சிவகுமார், குமரேசன் ஆகியோர்கள் இருப்பதாகத்தான் தெரிவித்தார் என்றால் சரி. 15.7.2018 அன்று 7.57 மணிக்கு பதிவான பதிவில் எனது கணவர் தான் குமரேசனுக்கு போன் செய்து அழைத்தார் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் குமரேசன் தான் போன் செய்தார் என்று என் கணவர் எனக்கு தெரிவித்தார். 20. 7 மணிக்கு பதிவான பதிவில் எதிரி குமரேசன் அந்த இடத்தில் இல்லை என்றால் அந்த 3 பேரில் ஒருவர் சாலை ஓரமாக பக்கவாட்டில் திரும்பி இருப்பவர் குமரேசன் போல் உள்ளது. 20.28 மணிக்கு பதிவான பதிவில் இருந்து பார்த்து சொல்லுங்கள் என் கணவர் அங்கு இருக்கிறாரா என்றால் இல்லை. அந்த இடத்தில் நேரத்தில் அங்கு இருப்பவர்கள் யார் என்று சொல்ல முடியுமா என்றால் ஒருத்தர் தான் அடையாளம் கண்டுபிடிக்க முடிகிறது. அவர் பெயர் சிவகுமார். இன்னொருத்தர் யார் என்று பார்த்து சொல்லமுடியவில்லை. 21.25 மணிக்கு பதிவான பதிவில் என் கணவர் இல்லை என்றால் சரி. 21.54 மணியில் இருந்து போடும் காட்சிகளில் பார்த்து சொல்லுங்கள் என்று கேள்வி கேட்கப்படுகிறது. 21.54 மணியில் இரந்து 21.56 வரை ஓடிய காட்சிகளில் இருந்த நபர்கள் மணிகண்டன், வினோத்குமார் . இந்த நேரத்தில் எனது மாமியார் அங்கு இல்லை என்றால் சரியல்ல. நானும் என் மாமியாரும் அங்கு தான் இருந்தோம். இந்த வியுவில்

தெரியவில்லை. 22.01 மணிக்கு என் கணவரை தூக்கி காரில் வைக்கிறார்கள் என்றால் சரி. அதிலும் நாங்கள் தெரியவில்லை என்றால், அந்த வியுவில் தெரியவில்லை. ஆனால் நாங்கள் அதன் அருகில் தான் இருந்தோம். 22.02 ல் இருந்து ஓடும் காட்சிகளில் 22.03.25 நொடிகளில் என் கணவரை காரின் உள்ளே வைத்து காரின் கதவு மூடப்படுகிறது என்றாலும் அது வரை நான் அந்த வியுவில் இல்லை என்றால் சரி. 22.03.42 நொடிகளில் எனது மாமியார் காரின் கதவி அருகில் வருகிறார் என்றால் சரி.22.03.50 நொடிகளில் தான் அந்த வியுவில் நான் வருகிறேன் என்றால் சரி. நான் அதன் அருகில் தான் இருந்தேன். 22.04 மணிக்கு நான் காரின் கதவு வழியாக என் கணவரை எட்டி பார்க்கிறேன் என்றால் சரி. என் கணவரை சரியாக காரில் கிடத்தி வைத்திருக்கிறார்களா என்று பார்த்தேன். நான் என் மாமியார் தவிர்த்து அருகில் இருக்கும் இரண்டு பெண்மணிகள் ஒருவர் பெயர் அமுல் அவர் எனது கணவரின் சித்தி. இன்னொரு பெண்மணி என் கணவரின் அக்கா லட்சுமி. அமுல். லட்சுமி அவர்கள் வீடு எங்கள் வீட்டிற்கு பக்கத்தில் தான் உள்ளது. விசாரணையின் போது சிசிடிவி யை நான் காவல் நிலையத்தில் பார்த்த போது என்னுடன் என் மாமியார், மாமனார் மற்றும் உறவினர்களும் பார்த்தோம். 22.05 மணிக்கு கார் அந்த இடத்தில் இருந்து நகர்கிறது என்றால் சரி. என்னிடம் தற்போது காட்டப்பட்ட வியு தவிர்த்து அருகில் கேமிராவில் கவர் ஆகாமல் நடந்த விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரி. அன்று இரவு என் வீட்டிற்கு அருகில் கார் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த போது கேமிரா அருகில் வீட்டிற்கு அருகில் இருந்தது என்றோ அது சம்மந்தப்பட்ட காட்சிகளை போலிசார் என்னிடம் காட்டினார்களா என்றால் இல்லை. 21.10 மணி பதிவில் ஓடும் காட்சிகளில் பைக்கில் வந்தவர் எதிரி குமரேசன். இந்த பதிவில் தற்போது பார்க்கும் போது பைக் கருப்பு கலர் என்று தெரிகிறது. நெம்பர் தெரியவில்லை. எதிரி குமரேசன் கருப்பு ப்ளூ வண்டி வைத்திருக்கிறார் என்று 15.7.2018 க்கு முன்பே எனக்கு தெரியும் என்றால் சரி. அவர் உறிவனர் என்பதால் எனக்கு தெரியும். 21.10.30 நொடியில் இருந்து கார் அருகில் நிற்பவர் சட்டை வரை தெரிகிறது என்றும் இடுப்பிற்கு கீழ் உள்ள பகுதி கார் மறைக்கப்பட்டுள்ளது என்றால் சரி. 21.10.32 நொடிக்கு ஓடும் பதிவுகளில் இருந்து காருக்கு பின்னால் டிக்கிங்கு மேல் பகுதியில் என்ன பொருள் இருக்கிறது என்ற பார்த்து சொல்ல முடியுமா என்றால் சொல்ல முடியும். கையில் டம்ளர் வைத்திருக்கிறார். டிக்கி மேல் இருந்து கிளாசை கையில் எடுக்கிறார் . கையில் இருந்து டம்ளரில் உற்றுகிறார். பாக்கெட்டில் இருந்து

ஏதோ எடுக்கிறார். டம்ளர் தெரியும் காட்சி எந்த மணி துளிகளில் பதிவாகிறது என்றால் 21.10.36 எனற் மணி துளிகளில் ஓடும் பதிவில் டம்ளர் தெரிகிறது. நான் பார்க்கும் காட்சிகளில் டம்ளர் இருப்பதோ டம்ளரில் ஊற்றுவதோ டம்பளரில் ஏதோ கலப்பதோ, அங்கு எத்தனை டம்ளர் இருக்கிறது என்பதோ நான் பார்க்கும் காட்சிகளில் தெரியவில்லை என்றால் சரியல்ல. நான் காவல் நிலையத்தில் என்னிடம் போலிசார் காண்பித்து இப்படி தான் சொல்ல வேண்டும் என்று சொல்லி கொடுத்ததை தற்போது நீதிமன்றத்தில் கூறுகிறேன் என்று சொன்னால் சரியல்ல. ஏற்கனவே காட்டப்பட்ட காட்சிகளில் இருந்த நபர்களை அடையாளம் காட்ட முடியாத போது தற்போது இருக்கும் காட்சிகளை பற்றி யும் பொருள்களை பற்றியும் துள்ளியமாக தெரிகிறது என்பது நம்பும் படியாக இல்லை என்றால் சரியல்ல. கடந்த வாரம் ஆய்வாளர் அவர்கள் காவல் நிலையத்தில் சிசிடிவி கேமிரா பதிவுகளை என்னிடம் காண்பித்து வழக்கிற்காக நடக்காத விஷயங்களை கூறிகிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் 13.7.2018 அன்று எதிரி குமரேசனின் மிரட்டல் சம்பவம் நடந்திருந்தால் என் கணவரை குமரேசன் உடன் பேசுவதற்கோ இருப்பதற்கோ நான் அனுமதித்து இருக்க மாட்டேன் என்று சொன்னால் சரியல்ல, என் கணவர் இறந்த உடனே சந்தேகத்தை எழுப்பி தாமதமின்றி புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல . எதிரிக்கும் நான் சொல்லும் சம்பவத்திற்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் மரணத்திற்கான வன்மமும் எதிரியிடம் இல்லை என்றால் சரியல்ல.

2 வது எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை –

என் கணவர் ஓலா கம்பெனியில் வாடகைக்கு ஓட்டி வந்தார். அப்போது காலை 8 மணிக்கு போவார். மாலை சுமார் 6 மணிக்கு வீட்டிற்கு வருவார். கம்பெனியில் இருந்து அவருக்கு போன் வரும் என்றால் சரி. போனில் வரும் ஒவ்வொரு அழைப்புகளும் எங்கிருந்து வருகிறது என்று தெரியுமா என்றால் தெரியாது. ஒவ்வொரு நாளும் காலை 8 மணிக்கு போய்விட்டு வரும் வரை அவர் எங்கெங்கு போகிறார் என்ன செய்கிறார் என்ற விவரங்களை நான் போன் மூலம் கேட்டு தெரிந்து கொள்வேன். 16 ஆம் தேதி என் கணவர் இறந்து விட்டார். 4 நாட்கள் கழித்து 20 ஆம் தேதி புகார் கொடுத்தேன். என் கணவரின் இறப்பில் எந்தவித சந்தேகமும் இன்றி குடிபோதையில் மாரடைப்பால் இயற்கையாக இறந்திருக்க கூடும்

என்று எந்தவித சந்தேகத்திற்கும் இடம் இல்லாமல் தான் என் கணவரை அடக்கம் செய்தேன் என்றால் சரி. ஏ.சி.எஸ். மருத்துவமனைக்கு அழைத்து சென்றதற்கான ஆதாரமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. காரில் அழைத்து சென்றேன். மருத்துவமனையில் காட்டியதற்கான ஆவணங்கள் இல்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டபடுவது என்னால் கொடுக்கப்பட்ட புகார் என்றால் சரி. எனக்கு எழுத படிக்க தெரியும். புகார் கொடுக்கும் போது எந்தவித பதற்றமும் இல்லாமல் தான் புகார் கொடுத்தேன் என்றால் சரி. அப்படி இருக்கும் போது என் கைப்பட எழுதி ஏன் புகார் கொடுக்கவில்லை என்றால் காவல் நிலையத்தில் கொடுக்கும் அளவிற்கு என்னால் எழுத தெரியாது என்பதால் எனது உறவினா் மூலமாக எழுதினேன். 20.7.2019 அன்று புகார் கொடுக்கும் போது எனது மாமியார், மாமனார் நான் மற்றும் உறவினா்கள் போனோம். என் கணவரின் இறப்பு குறித்து சந்தேகம் குறித்து எப்போது என் காதுக்கு வந்தது என்றால் அவருடைய நண்பர்கள் மூலமாகத்தான் அந்த விவரம் முதலில் என் காதுக்கு வந்து சந்தேகம் ஏற்பட்டது. எந்த தேதி எந்த நேரம் என்றால் 18 ஆம் தேதி காலையில் நான் அழைத்து விசாரித்த போது தெரிய வந்தது. எனது வீட்டில் அழைத்து விசாரித்தேன். 18 ஆம் தேதி காலையில் என்னிடம் சொன்னவர்கள் பெயர் சிவகுமார், சுந்தர் ராஜ் . இவர்கள் இருவரும் எங்கள் வீட்டில் இருந்து கொஞ்ச தூரம் நடந்து செல்லும் தூரத்தில் தான் குடி இருக்கிறார்கள். இந்த இரண்டு நபர்களும் என் கணவரின் இறுதி சடங்கில் கலந்து கொண்டார்கள். அன்றைய தேதியில் இந்த சம்பவத்தை குறித்து மேற் படி நபர்கள் என்னிடம் பகிர்ந்து கொள்ளவில்லை என்றால் சரி. அதன் பின்னர் நாங்களாகத்தான் கேட்டோம். என் கணவரை அடக்கம் செய்யும் வரை அவர்கள் அங்கு தான் இருந்தார்களா என்றால் நான் அழுது கொண்டிருந்தேன் அவர்கள் எவ்வளவு நேரம் இருந்தார்கள் என்று நான் கவனிக்கவில்லை. அவர்கள் அந்த தகவலை என்னிடம் சொன்ன பிறகும் ஒரு நாள் கழித்து தான் புகார் கொடுத்துள்ளேன் என்றால் சரி. புகார் கொடுக்கும் போது மேற்சொன்ன இரண்டு நபர்களும் என்னுடன் வரவில்லை என்றால் சரி. நான் கொடுத்த புகாரின் பேரில் எத்தனை மணிக்கு நடவடிக்கை எடுத்தார்கள் என்றால் , எத்தனை மணிக்கு யார் யாரை விசாரித்தார்கள் என்று தெரியாது. என்னை மறு நாள் அழைத்து சிசிடிவி கேமிராவை காண்பித்தார்கள். 20.7.2018 அன்று புகார் தந்த உடன் நான் வீட்டிற்கு கிளம்பி விட்டேன் என்றால் சரி. நான் ஆய்வாளர் இடம் அந்த புகாரை கொடுத்தேன். நான் கொடுத்த புகாரை பெற்றுக்கொண்டு

ரசிது கொடுத்தாரா என்றால் அது குறித்து என் மாமா பார்த்து கொண்டார். என்னிடம் எந்த ரசிதும் தரவில்லை. புகார் கொடுத்த அன்றே என்னை விசாரித்தார்கள். நாங்கள் சுமார் 4,5 முறை புகார் சம்மந்தமாக விசாரணைக்கு காவல் நிலையம் சென்றோம். எந்தெந்த தேதியில் போனோம் என்று நினைவில்லை. என் கணவருக்கு நான் மட்டும் தான் ஒரே மனைவி. என் கணவருக்கு வேறு பெண்களுடன் தொடர்பு உள்ளதா என்றால் இல்லை. என் கணவர் இறக்கும் வரை எனக்கு நல்ல கணவராகவும் என் பிள்ளைக்கு நல்ல தகப்பனாராகவும் தான் வாழ்ந்து வந்தார் என்றால் சரி. என் கணவருக்கு வெளி வட்டாரத்தில் உள்ள பழக்க வழக்கம் மற்றும் பணம் கொடுங்கள் வாங்கள் குறித்து அதனால் ஏற்படும் பிரச்சனைகள் குறித்து என்னிடம் தெரிவிப்பாரா , கலந்து ஆலோசிப்பாரா என்றால் பிரச்சனை இருந்தால் தெரிவிப்பார். நான் கொடுத்த புகாரில் நான் குறிப்பிட்டுள்ள பெண்மணி பத்மாவதியை குறித்து அங்க அடையாளங்கள மற்றும் வயது, திருமணம் ஆனவரா இல்லையா, அல்லது அவரது விலாசம் குறிப்பிட்டுள்ளேனா என்றால் பெயரை குறிப்பிட்டுள்ளேன். மற்ற விவரங்களை குறிப்பிடவில்லை. என்னிடம் காட்டப்படும் அ.சா.ஆ.1. புகாரிலும் என்னுடைய முதல் விசாரணையிலும் போலிசார் விசாரணையில் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலத்திலும்,2 வது எதிரி எனது கணவரின் பிரண்ட் என்று சொன்னதாக சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். 2 வத எதிரியை நான் எங்கேயாவது பார்த்தேனா என்று புகாரிலோ விசாரணையிலோ முதல் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் முதல் விசாரணையில் 2 வது எதிரி குறித்து சொல்லி உள்ளேன். நான் நீதிமன்றத்திலும் காவல் நிலையத்திலும் சொல்லி உள்ளேன். என்னுடைய புகாரில் 2 வது எதிரி எனக்கு தெரிந்தவரோ, உறவினரோ அல்லது எனக்கு பரிட்சையமானவர் என்றோ என்று சொல்லி உள்ளேனா என்றால் தெரிந்தவர் என்று சொல்லவில்லை. ஆனால் எனக்கு 2 வது எதிரி தெரிந்தவர். இவ்வாறு நான் எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. புகாரில் அ.சா.ஆ.1. ல் 2 வது எதிரி பத்மாவதிக்கும் என் கணவருக்கும் முன் விரோதம் இருந்ததாக எங்கேயாவது குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால் புகாரில் சொல்லவில்லை. சாட்சி சொல்கிறார். 2 வது எதிரி செல்லி தான் குமரேசன் வந்து சண்டை போட்டார். எனது கணவர் ஒரு செல்போன் மட்டும் தான் உபயோகபடுத்தி வந்தார். என் கணவர் இறந்த உடன் அந்த செல்போனை தனசேகர், மணிகண்டன், வினோத்குமார் அந்த இடத்தில் இருந்து செல்போனை எனக்கு எடுத்து கொடுத்தார்கள். என் கணவர்

வைத்திருந்த செல்போன் சாதாரண பட்டன் செல்போன் தான். தொடுதுறை அலைபேசி கிடையாது. இந்த புகாரில் 2 வது எதிரியின் தூண்டுதல் பேரில் தான் இந்த என் கணவரின் இறப்பு சம்பவம் நடந்தது என்றும் அவர் பெயரில் நடவடிக்கை எடுங்கள் என்றும் குறிப்பிட்டு சொல்லி உள்ளேனா என்றால் சொல்லி உள்ளேன். பத்மாவதி குறித்து புகாரில் கடைசி 6 வரிகளில் சொல்லி உள்ளேன். 2 வது எதிரி பத்மாவதியின் தூண்டுதலில் நடந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல. தற்போது என்னிடம் காட்டப்பட்ட அ.சா.ஆ.1. புகாரை படித்துவிட்டு பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் 2 வது எதிரிக்கும் என் கணவருக்கும் முன் விரோதம் இருந்ததாக எந்த இடத்திலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிகள் மீது எந்த பிரச்சனைக்காகவும் இதற்கு முன்பாக புகார் கொடுக்கவில்லை என்றால் சரி. நான் நீதிமன்றத்தில் காட்டப்பட்ட சிசிடிவி பதிவு பார்த்தேன். அந்த பதிவில் எந்தவித ஒரு சிறிய வார்த்தை கூடி காதில் விழ வாய்ப்பில்லை என்றால் சரி. அந்த வீடியோ பதிவில் நான் பார்த்த வாகனங்களில் பதிவு எண்கள் விடியோவில் தெரியவில்லை என்றால் சரிதான். என் கணவர் இறக்கும் தருவாயிலோ இறந்த நாள் அன்றோ அதற்கு முன் நாளோ ஆஜர் 2 வது எதிரியை என் கணவருடன் இருந்ததாகவோ நான் பார்த்த சிசிடிவி பதிவிலோ என் கணவருடன் ஒன்றாக இருந்ததாகவே இல்லை என்றால் சரி. ஆனால் என் கணவர் இறந்த உடன் 2 வது எதிரி என் கணவர் பிரேதத்தை பார்த்துவிட்டு உடனே போய்விட்டார். 2 வது எதிரி என் கணவரின் இறப்பிற்கு வந்ததாக போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேன். இவ்வாறு நீதிமன்றத்திலோ போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. போலிசார் விசாரணையில் சொல்லி உள்ளேன். யார் யாரை எந்தெந்த தேதியில் கைது செய்தார்கள் என்று எனக்கு நேரடியாக தெரியாது. நான் சொல்வது போல் 13.7.2018 அன்று எதிரி குமரேசனின் மிரட்டல் சம்பவம் நடந்திருந்தால் என் கணவரை குமரேசன் உடன் பேசுவதற்கோ இருப்பதற்கோ நான் அனுமதித்து இருக்க மாட்டேன் என்று சொன்னால் சரியல்ல, என் கணவர் இறந்த உடனே சந்தேகத்தை எழுப்பி தாமதமின்றி புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல . எதிரிக்கும் நான் சொல்லும் சம்பவத்திற்கு எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல. என் கணவரின் மரணத்திற்கான வன்மமும் எதிரியிடம் இல்லை என்றால் சரியல்ல. இந்த வழக்கில் 2 வது எதிரி பத்மாவதிக்கும் இந்த வழக்கிற்கம் எந்த சம்மந்தமும் இல்லை என்றாலும் அப்படி இந்த வழக்கில்

சம்மந்தம் இருந்திருந்தால் அவருக்கு எதிரான சாட்சியம் தெள்ளத்தெளிவாக சொல்லி இருப்பேன் என்றால் சரியல்ல. ஆஜர் 2 வது எதிரி பத்மாவதியை காவல் நிலையத்தில் விசாரணையின் போது தான் பார்த்தேன் என்று சொன்னாலும் அதன் பிறகு நீதிமன்றத்தில் தான் பார்த்தேன் என்றால் சரியல்ல. அதற்கு முன்பாகவும் பார்த்திருக்கிறேன். நான் சம்பவ இடத்தில் என் கணவரை இரவு 10 மணிக்கு பார்த்தேன். நான் பார்த்த வீடியோ பதிவில் நான் பார்க்கும் போது என் கணவர் கீழே தான் கிடந்தார். 2வது எதிரி பத்மாவதிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 வது எதிரியை நான் இது வரை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. என் கணவருக்கும் 2 வது எதிரிக்கும் நெருங்கிய நண்பர் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 வது எதிரி என் கணவருக்கு பிரண்ட் தான். ஆரம்ப காலம் முதலே இது வரை இந்த வழக்கில் எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் ஆஜர் 2 வது எதிரிக்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல. 2 வது எதிரி தூண்டுதலின் பேரில் இறப்பு நடந்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. அப்படி 2 வது எதிரி தூண்டுதலின் பேரில் இவ்வாறான சம்பவம் நடக்கும் அளவிற்கு என் கணவருக்கும் 2 வது எதிரிக்கும் முன் விரோதமோ பகையோ இல்லை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கிற்கும் 2 வது எதிரிக்கும் தொடர்பு இல்லை என்றாலும் சம்மந்தம் இல்லாத நபருக்கு அவர் மீது கொண்ட காழ்புணர்ச்சி காரணமாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை = இல்லை.